# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 03.07.2025

SC. 77/2022

அ.சா 5 – கலைஞர்

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 03 ம் நாள் கலைஞர் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைஞர் | தந்தை பெயர் | புகழேந்தி |
| வயது | 45 | கிராமம் | மருதப்பட்டி |
| வட்டம் | அருர் | மாவட்டம் | தர்மபுரி |

முதல் விசாரணை : –

நான் தருமபுரி மாவட்டம் அருர் தாலுக்கா மருதப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா 2 மணி என் மாமா ஆவார். என் மாமா காமன்தொட்டியில் உள்ள டாஸ்மாக் கடை எண் 3033 ல் 7 வருடங்களாக வேலை பார்த்து வந்தார். கடந்த 14.08.2015 ம் தேதி அன்று காலை சுமார் 10 மணியளவில் என் மாமா எனக்கு அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு , தன்னுடன் வேலை பார்க்கும் , சேல்ஸ் மேன் மாதப்பன், லஷ்மணன் , பார் அட்டண்டர் சின்னசாமி ஆகியோருக்கு உடல் நிலை சரியில்லை என்றும் , அவர்களை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்றும் அதனால் உதவிக்கு வரும் படி என்னை அழைத்தார். நானும் டாஸ்மாக் கடைக்கு சென்றேன். அன்று இரவு 10.00 மணிக்கு கடையை மூடினோம், கடையை பூட்டு போட்டு என் மாமா சீல் வைத்தார். கடையை மூடி விட்டு நாங்கள் வந்த போது இரு சக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்தார்கள். அதில் 2 நபர்கள் கோட்டர் வேண்டும் என்று, கேட்டார்கள். என் மாமா பணப்பையை என்னிடம் கொடுத்து வைத்திருந்தார். வெங்கடராமனிடம் நோட்டு, கால்குலேட்டர் ஆகியவற்றை கொடுத்திருந்தார்.

இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் கோட்டர் கேட்ட பின்பு என்னை முகத்தில் அடித்து விட்டு நான் வைத்திருந்த பணப்பையை பிடிங்கி கொண்டு , இரு சக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். பணப்பையை பிடுங்கியபோது என் மாமா தடுத்த போது அவர்கள் என் மாமாவை தலையில் இரும்பு ராடால் அடித்து விட்டார்கள். என் மாமாவுக்கு இரத்த காயம் ஏற்பட்டு தலை முழுவதும் இரத்தம் வடிந்தது. மீண்டும் அவர்கள் , என் மாமாவை அடித்த போது என் மாமா கையால் தடுத்ததால் , அவரது இடது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது. நானும் , வெங்கடராமனும் பணப்பையை பிடிங்க சென்ற போது அவர்கள் , எங்களை கத்தியை காட்டி மிரட்டினார்கள். என் மாமாவை இரும்பு ராடால் வலது கால் தொடையில் அடித்ததால் அவர் கீழே விழுந்து விட்டார். பணத்தை அடித்து விட்டதாக என் மாமா கத்தியவுடன் அருகில் இருந்த நரசிம்மன் ஓடி வந்தார். இரு சக்கர வாகனத்தல் வந்தவர்கள் அதில் , தப்பித்து ஓடிவிட்டார்கள். அருகில் உள்ள சப்டி டாஸ்மாக் சூப்பர் வைசர் மனோகருக்கு, நடந்த சம்பவம் பற்றி என் மாமா செல்போன் மூலம் தகவல் தெரிவித்தார். பின்பு 108 க்கு போன் செய்து வரவழைத்து , எங்களை ஒசூர் அரசு மருத்துவனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள். நடந்ததை சொன்னோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur